பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 25 சனிக்கிழமை (10-08-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 249

# முகாம்களில் இருப்போருக்கு மட்டுமே இனிமேல் நிவாரணம்!

## கொழும்பிலிருந்து உத்தரவு வந்தது
## 1 லட்சத்து 73 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 10

யாழ்ப்பாண மாவட்டத்திலும், இனிமேல் அகதி முகாம்களில் தங்கியிருக்கும் குடும்பங்களுக்கு மட்டுமே அரசாங்கம் வழங்கி வரும் உலர் உணவு நிவாரணம் கிடைக்கும்.

ஏனையோருக்கு வழங்கப்படும் நிவாரணத்தை உடனடியாக நிறுத்தி வைக்குமாறு கொழும்பிலிருந்து புனர்வாழ்வு அமைச்சு அனுப்பிய உத்தரவு நேற்று யாழ். செயலகத்துக்கு வந்து சேர்ந்தது.

அரசாங்கத்தின் இந்தப் புதிய உத்தரவால் யாழ்ப்பாணக் குடாநாட்டில், மொத்தம் 1 லட்சத்து 73 ஆயிரம் குடும்பங்கள் இப்போது பெறும் நிவாரணத்தை இழந்து பாதிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன.

முகாம்களில் தங்கி இருப்பவர்களுக்கு மட்டுமே உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவேண்டும் என்று புனர்வாழ்வு அமைச்சு கடந்த மாதம் 31 ஆம் திகதியே கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய ஏனைய வடபகுதி மாவட்டங்களின் அரச அதிபர்களுக்கு அறிவித்திருந்தது. இது பற்றிய செய்தி 1-8-91 ஆம் திகதிய உதயனில் வெளிவந்திருந்தது.

அதே உத்தரவு நேற்று யாழ். செயலகத்துக்கும் கொழும்பிலிருந்து கிடைத்தது: அரசின் இந்த உத்தரவால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிவாரணம் பெற்று வந்தவர்களில் 1,73,000 குடும்பங்கள் பாதிக்கப்பட உள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மொத்தம் 8,700 குடும்பங்கள் மட்டுமே அகதி முகாம்களில் இப்போது தங்கி வருகின்றனர்.

[3 ஆம் பக்கம் பார்க்க]

### உடுத்துறையில் வெறியாட்டம்
## படையினர் சூட்டுக்கு ஒருவர் பலி; இருவர் காயம்
### பொருள்கள் சூறையாடப்பட்டன

தாளையடி, ஆக. 10

நேற்று முன்தினம் (வியாழன்) ஆழியவளை, உடுத்துறைப் பகுதிகளில் தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற சமயம் படையினரிடம் சிக்கிக் கொண்டதாகக் கருதப்படும் பல பொதுமக்கள் பாதுகாப்பாக திரும்பி வந்து சேர்ந்தனர்.

அப்பகுதியில் படையினர் நடத்திய வெறியாட்டத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார். படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் இருவர் படுகாயமடைந்தனர். மற்றொருவர் மோசமாகத் தாக்கப்பட்டார். பல வீடுகள் உடைக்கப்பட்டு வீட்டு தளபாடங்

[3 ஆம் பக்கம் பார்க்க]

### ஆனையிறவில் நேற்று முன்தினம்
## படையினர் 6 பேர் பலி 52 பேர் காயமடைந்தனர்

கொழும்பு, ஆக. 10

ஆனையிறவுப் பகுதியில் நேற்று முன்தினம் நடந்த சண்டையில் 6 படையினர் கொல்லப்பட்டனர்; 52 பேர் காயமடைந்தனர் என்று நேற்று கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

கடும் சண்டையின் பின்னர் பரந்தன் பக்கமாகவுள்ள— உல்லாச விடுதிப்பகுதியையும், பாடசாலைப் பகுதியையும் படையினர் மீட்டெடுத்து விட்டனர் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தகவல் வெளியிட்டன.

(ஒ-த)

## பணப்புழக்கம் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 10

யாழ். மாவட்டத்தில் பணப்புழக்கம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஜூலை 9 ஆம் திகதிக்குப் பின்னர் திரவப்பணம் அனுப்பப்படாததாலும் —

வர்த்தகர்களின் வைப்புப் பணம் வங்கிகளுக்கு கிடைக்காததாலும் —

கர்சோலைகளை வைப்பிலிட முடியாத காரணத்தாலும் — பணப்புழக்கம் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(அ-3)

## பீரங்கி தாக்கு

சுழிபுரம், ஆக. 10

காரைநகர் படையினர் நேற்று பகல் 11 30 மணியளவில் கோவளம், பொன்னாலை கடற்பகுதியை நோக்கி பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

ஆடி அமாவாசை தினமான நேற்று கடலில் நீராடுவதற்கு சிலர் எத்தனித்தபோதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

(ஒ-28)

## யாழ். அரசாங்க அதிபர் பிரதமருடன் பேசுவார்

யாழ்ப்பாணம், ஆக. 10

யாழ். மாவட்ட மக்களுக்கான நிவாரண உணவு விநியோகம் நிறுத்தப்பட்டிருப்பது குறித்து தாம் பிரதமர் திரு. டி. பி. விஜேதுங்காவுடன் பேச்சு நடத்த இருப்பதாக யாழ். அரச அதிபர் கொழும்பில் இருந்து நேற்று செய்தி அனுப்பியுள்ளார்.

நிவாரணம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து அரச அதிபர் அங்கு முக்கிய அதிகாரிகளுடனும் பேச்சு நடத்த இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-3)

## கட்டுப்பாட்டு விலையில் பங்கீட்டுக்கு உணவு பொருள்

சகலரும் கட்டுப்பாட்டு விலையில் உணவுப் பொருள்களைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பெறுவதற்கு வகை செய்யப்படும்.

இதற்கான ஏற்பாடுகளை யாழ். செயலகம் செய்து வருவதாக புனர்வாழ்வுப் பிரிவுப் பணிப்பாளர் திரு. எஸ். பத்மநாதன் உதயனுக்குத் தெரிவித்தார்.

உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்படுவதால் ஏற்படும் கஷ்டங்களை ஈடுசெய்யும் முகமாகவே இந்த ஏற்பாடு என்றும் அவர் மேலும் தகவல் தந்தார்.

கப்பல்களில் வந்து சேரும் பொருள்களில் முகாம்களில் உள்ள 8 ஆயிரத்து 700 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட பின்னர் மிகுதியானவை பங்கீட்டு அடிப்படையில், கட்டுப்பாட்டு விலையில் ஏனையோருக்கு வழங்கப்படவிருப்பதாக அவர் விவரித்தார்.

இது சம்பந்தமாக நாளை மறுதினம் செயலகத்தில் நடைபெறும் உதவி அரச அதிபர்கள் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட உள்ளது.

[அ-3]

### வடபகுதிக்கு வெளியே செல்வோருக்கு
## பாஸ்வழங்கும் அலுவலகங்கள் இன்று தொடக்கம் இயங்கும்

யாழ்ப்பாணம், ஆக. 10

போக்குவரத்து அனுமதி [பாஸ்] வழங்கும் அலுவலகங்கள் இன்று முதல் மீண்டும் இயங்க உள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு இது தொடர்பாக வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பு வருமாறு:-

★ கடந்த ஜூன் 20 ஆம் திகதியில் இருந்து ஜூலை 14 ஆம் திகதி வரை வழங்கப்பட்ட தற்காலிக அனுமதிப் பத்திரங்களை வைத்திருப்போர் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் வடபகுதிக்கு வெளியே செல்வதானால் அவற்றை மீளவும் புதுப்பிகக்த் தேவையில்லை.

★ ஜூன் 20 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்ட தற்காலிக அனுமதிப் பத்திரங்

[ 3 ஆம் பக்கம் பார்க்க]

## தனியார் கல்வி நிலையங்கள் இன்று முதல் இயங்கும்!

யாழ்ப்பாணம், ஆக. 10

போர்க்காலப் பங்களிப்பை வழங்குவதற்காக, தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த தனியார் கல்வி நிறுவன வகுப்புகளை மீண்டும் இன்று முதல் ஆரம்பிக்கலாம் என தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் அறிவித்துள்ளது.

முன்னர் அறிவிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளை மீறாத வகையில் தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்குதல் வேண்டும் என்றும் —

ஒழுங்கு விதிகள் மீறப்பட்டால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் ஒன்றியம் அறிவித்துள்ளது.

## மூளாயில் ஷெல்

சுழிபுரம், ஆக. 10

மூளாய் ஆலடிப் பகுதியை நோக்கி நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் ஷெல்கள் ஏவிவிடப்பட்டன.

அடுத்தடுத்து 5 ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன. [illegible] ஏற்படவில்லை.

[ஒ-28]

### தடைசெய்யப்பட்ட பொருள்கள்:
## அடுத்த சில தினங்களில் பட்டியல் வெளிவரும்

கொழும்பு, ஆக. 10

வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு தடை செய்யப்பட்டுள்ள பொருள்கள் அடங்கிய பட்டியல், அடுத்த சில தினங்களில் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்படும் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.

பட்டியலில் குறிக்கப்பட்ட பொருள்கள் தவிர ஏனைய பொருள்களை 'பெர்மிட்' இன்றி வடபகுதிக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. [இ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஆறு வாரங்கள் நிரம்பிய அழகான ஆண் - பெண் பொமனேரியன் நாய்க்குட்டிகள் (Wormed and Weaned) விற்பனைக்குண்டு. தொடர்பு: 122, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். [17751]

இலங்கை வேதாகம சங்கத்திலிருந்து பெறப்பட்ட விளக்கக் குறிப்பு வேதாகமங்கள், மலிவுப் பதிப்பு வேதாகமங்கள், ஆலய பாவனைக்கான வேதாகமங்கள், சிறுவர் நூல்கள் விற்பனைக்கு உண்டு. சி. எல். எஸ். புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [4021]

வீட்டுத் தோட்டம், பெரிய தோட்டங்கள் செய்பவர்களுக்குரிய எல்லா விதமான விதைகளும் உண்டு. மங்களா ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (17765)

### மணப்பெண் தேவை

யாழ். இந்து 44 வயது T.Aக்கும், 31 வயது B Sc. சிவில் என்ஜினியருக்கும், 30 வயது வங்கியாளருக்கும், 36 வயது BSc. ஆசிரியருக்கும், குற்றமுள்ள 38, 40 வயது வர்த்தகருக்கும், வெளிநாட்டிலுள்ள 33-48 வயதுக்கு இடைப்பட்ட பட்டதாரிகளுக்கும் மணப்பெண் தேவை. மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம். (17762)

யாழ்ப்பாண இந்து, அரசாங்க உத்தியோகத்தருக்கு 25 - 33 வயதுக்கு இடைப்பட்ட மணப்பெண்ணை பெற்றோர் தேடுகின்றனர். பூரம் 4 ஆம் பாதம் வெளிநாடு விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம். படம் தேவை. மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம். (17763]

### மணமகன் தேவை

யாழ்ப்பாண இந்து, சைவ போசன அரசாங்க மணப்பெண்ணுக்கு 33-40 வயதுக்கு இடைப்பட்ட குற்றமற்ற மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். சீதனம் தரப்படும். நட்சத்திரம்: திருவாதிரை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம். [17764]

### கண்ணாடிகள் தேவை

பாவித்த பழைய கண்ணாடிகள், முகம் பார்க்கும் கண்ணாடிகள் கண்ணாடி அலுமாரிகள் யாவும் நிதானமான விலையில் ஒவ்வொரு சனி, ஞாயிறு தினங்களில் கொள்வனவு செய்யப்படும். தொடர்பு: இல. 1, மாட்டீன் றோட், யாழ்ப்பாணம். [17768]

### மணமகள் தேவை

யாழ். இந்து 40 வயது நிரம்பிய கனடா வங்கியில் உயர் பதவி வகிக்கும் மணமகனுக்கு பெண் தேவை. U.K யில் அல்லது கனடாவில் இருந்தாலும், தாரம் இழந்தவர்களும், விவாகரத்து செய்தவர்களும் தொடர்பு கொள்ளலாம். ABCDE விவாகப் பொருத்துனர், 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. [17769]

### வியாழ மாற்றம்

உதய லக்கினத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட 12 ராசிகளுக்கு விளையும் வியாழ மாற்றப் பலாபலன்கள். ஆக்கியோன்: சோதிட ஞானி சண் மாஸ்ரர்: விலை ரூபா 7/50. யாழ் நகரில் எங்கும் கிடைக்கும். 2/5, துரைராசா வீதி, வண்ணார்பண்ணை. [17758]

### பயிற்சி மதிப்பீடு

O/L 90, 91 விஞ்ஞானம், கணிதம், தமிழ், சமூகக் கல்வி, ஆங்கிலம், வர்த்தகம் ஆகிய பாடங்களுக்குரிய பகுதி I & II வினாத்தாள்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படும். விடையளித்து தரும் பட்சத்தில் இலவசமாக விடையுடன் திருத்திக் கொடுக்கப்படும். Bond புத்தக நிலையம், 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [4229]

### புலமைப்பரிசில் (ஆண்டு -5)

மாணவர்களை பாடசாலைகளுக்கு தேர்ந்தெடுப்பதற்கும், உதவிப்பணம் வழங்குவதற்குமான பயிற்சி பரீட்சை தமிழ், கணித பாடங்களுக்குரிய மாதிரி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும். அவற்றிற்கு விடையளித்துத் தரும் பட்சத்தில் இலவசமாக விடைகளுடன் திருத்திக் கொடுக்கப்படும். Bond புத்தக நிறுவனம், 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [4228]

## நீர்ப்பாசன திணைக்கள அறிவித்தல்

எனது பணிமனையிலும், பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் பணிமனையிலும் கடமையாற்றும் சகல ஊழியர்களையும் உடனடியாகக் கடமைக்குத் திரும்புமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

எந்திரி: எஸ். எஸ். சிவகுமார்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
கிளிநொச்சி.

வில்சன் வீதி, கிளிநொச்சி.
09-08-1991. [0340]

## கூட்டுறவுப்பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

யாழ். கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் பின்வரும் பயிற்சி நெறிகள் 01-09-1991 இல் ஆரம்பிக்கப்பட உள்ளன.

1. கனிஷ்ட பிரிவு:
   8ஆம் வகுப்பு சித்தி
   கூட்டுறவுப் பணியாளர்களுக்கு மட்டும்.
2. சாதாரண பிரிவு:
   க. பொ. சாதாரணம் சித்தி
   கூட்டுறவுப் பணியாளர்களுக்கும், ஏனையோருக்கும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 20 - 08 - 1991**

விவரங்களுக்கு யாழ். கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியுடன் தொடர்பு கொள்ளவும்.

பூ. க. இராசரத்தினம்,
அதிபர்.

கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி,
இல. 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். [சி-0339]

## கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவு
## விவசாய உதவித் திட்ட கருத்தரங்கும் · இளைக்குழுத் தேர்தலும்

கோப்பாய் மக்கள் நலன்காக்கும் பிரிவானது அகில உலக கெயர் ஸ்தாபனத்துடன் இணைந்து (கார்த்திகை 1991 — ஆடி 1992) விவசாய உதவித் திட்டத்தை கோப்பாய் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளது. இது சம்பந்தமான விளக்கவுரைகளும் விண்ணப்பப் படிவ விநியோகமும் கிளைகளுக்கான நிர்வாகக்குழுத் தேர்தலும் 11 - 08 - 1991இலிருந்து ஆரம்பமாகும். மேலதிக விவரங்களுக்கு தலைமையலுவலகத்தில் தொடர்பு கொள்ளலாம்.

கா. கணேசலிங்கம்,
பொதுச் செயலாளர்.
[17772]

## ★ முக்கிய அறிவித்தல் ★

## NEW SCIENCE ACADEMY
JAFFNA.

வகுப்புகள் யாவும்
**10 — 08 — 1991 சனிக்கிழமை**

அதாவது இன்று முதல் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும். ஆசிரியர்களும், மாணவர்களும் உங்களுக்குரிய நேர அட்டவணைப்படி தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

எமது கிளை நிறுவனமாகிய
நல்லூர் சயன்ஸ் அக்கடமி
ஆசிரியர்களும், மாணவர்களும் சமுகம் தரவும்.

[சி-0343] - நிர்வாகி.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம்:
11 - 03 - 1927

மரணம்:
14 - 08 - 1989

### அமரர் ஞானப்பிரகாசம் ஜோண்

[முன்னாள் அதிபர், யா/ரஞ்சனாதேவி வித்தியாலயம்]

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்!

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

28, புறாடி லேன், யாழ்ப்பாணம். (17767)

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்,
இலங்கை.

### மருத்துவபீடம் (இறுதியாண்டு பரீட்சை - 1991)

16 - 09 - 1991 இல் நடைபெறவிருந்த மருத்துவபீட இறுதியாண்டுப் பரீட்சை பின் போடப்பட்டுள்ளது. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

- பதிவாளர்.

[சி-0342]

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
13 - 03 - 1956

மறைவு:
10 - 08 - 1985

திருமதி
### கமலாதேவி சுப்பிரமணியம்
[ஆசிரியை]

ஆண்டு பல சென்றாலும் உங்கள் பிரிவுத் துயர் எம்மை விட்டு என்றும் அகலாது.
உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;

கணவன், மகன் - மயூரன்.

''கிறிஸ்தவக் கல்லூரி முன்பாக''
கோப்பாய். [illegible]

## ஈராண்டு நினைவலைகள்



மலர்வு:
14 — 02 — 1949

உதிர்வு:
10 — 08 — 1989

### இராமநாதன் கருணாகரன்

மகனே கருணாகரா!
ஈராண்டு சென்றிட்டாலும்
இறைவனில் நீர் வாழ்ந்திட்டாலும்
எம்துயரம் மாறாதப்பா
எம் கண்ணீர் ஓயாதப்பா - என்றும்
எம் நெஞ்சம் மறவாதப்பா!

அன்புப் பெற்றோர், சகோதரர்கள்,
மனைவி, உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.

தொல்புரம்,
சுழிபுரம். [4233]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தகாதவர் முத்திரை

அரசாங்கம், திருகோணமலை மாவட்டத்தில் விசித்திரமான விதிமுறை ஒன்றை நடைமுறைப்படுத்துவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

1987 ஆம் ஆண்டுக்குப் பின்னர் திரும்பி வந்து குடியமர்ந்தவர்கள், தங்கள் அடையாளங்களை நிரூபித்தாக வேண்டும் என்பதே அந்த விசித்திர விதிமுறை - உத்தரவு.

திருகோணமலை மாவட்டத்தில் விரும்பத்தகாதவர்கள் குடியிருப்பதைத் தவிர்ப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கம் என்று அரசாங்கத் தரப்பில் கூறப்பட்டிருக்கிறது. விரும்பத்தகாதவர்கள் என்று அரசாங்கம் யாரைக் கருதுகிறது என்பது வெளியிடப்படவில்லை. அவர்கள் யார்?

நாடு சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்தே அரசாங்கங்கள் திருகோணமலையில் சிங்களக் குடியேற்றத் திட்டங்களை உத்தியோகபூர்வமாகவும், வெளிப்படையாகவும் உருவாக்கின.

சமீப காலமாக உத்தியோக ரீதியில் மட்டும் அல்லாமல், சிங்களப்பேரினவாத சக்திகள் பல்வேறு அமைப்புகள், நிறுவனங்கள் ஊடாகச் செய்யும் சிங்களக் குடியேற்றங்களுக்கும் அரசாங்கம் உதவி வருகிறது.

இனக்கலவரம், படையினர் அட்டூழியம் ஆகியன காரணமாகத் தமிழ் மக்கள் அகதிகளாக இடம்பெயரும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டு, தமிழர்கள் வாழ்ந்த பிரதேசங்களிலும் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டு வருகிறார்கள். அவர்களுக்கு ஆக வேண்டிய சகல உதவிகளையும் பாதுகாப்புப் படையினர் செய்து வருகிறார்கள். அரசாங்கமும் திரைக்குப் பின்னால் நின்று இந்த மண் அபகரிப்புக்கு ஊக்கமும், உதவியும் அளித்து வருகிறது.

மொத்தத்தில் திருகோணமலை மாவட்டம் சிங்கள மாவட்டமாக இன்னும் இரண்டொரு வருடங்களில் உருவாகிவிடும் அளவுக்கு மிகப்பெரும் எடுப்பில் அங்கு குடியேற்றங்கள் நடந்து வருகின்றன.

மிகச் சமீப காலமாக திருகோணமலை மாவட்டத்தில் குடியேற்றப்படுபவர்கள் சிறைச்சாலைகளை விட்டு வெளியேறியவர்களும், குண்டர்களுமாவர். உண்மையில், பொதுவான பார்வையில், அவர்களே விரும்பத்தகாதவர்கள். ஆனால் அரசாங்கத்தின் செல்லப் பிள்ளைகள் அவர்கள்.

ஆகவே அரசு விரும்பத்தகாதவர்கள் என்று கணிப்பதும், அடையாளங்களை நிரூபிக்கும்படி கேட்பதும் யாரை? இனக்கலவரம், இராணுவ அக்கிரமங்கள் காரணமாக இடம் பெயர்ந்து அகதிகளாக வேறு மாவட்டங்களுக்கு அல்லது தமிழகம் சென்று, இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்தபோது திரும்பிய தமிழர்களைத் தான்!

பரம்பரை பரம்பரையாக, பல்லாண்டு காலமாக தமது சொந்த மண்ணில் குடியிருந்த தமிழர்களை, அவர்கள் வெளியேறும்படியான பாதுகாப்பற்ற நிலையைத் தானே உருவாக்கி விட்டு, அவர்களை அடையாளம் காட்டுமாறு கேட்கிறது அரசு! விரும்பத்தகாதவர்களாக முத்திரை குத்த எத்தனிக்கிறது. இதைவிட வேறு சண்டாளத்தனம் என்ன இருக்க முடியும்?

இந்த முத்திரை குத்தும் நடவடிக்கை, மீண்டும் தமிழர்களை அங்கிருந்து வெளியேற்றிவிட்டு, அவர்களின் மண்ணில் சிங்களவர்களைக் குடியேற்றி திருகோணமலையை முழுமையான சிங்கள மாவட்டம் ஆக்குவதற்கேயாம்! தமிழன் சிங்கள அரசுகளால் ஆளப்படும் வரை இவ்வாறானவை தொடரும்.

### அதிபர்கள் சேவை தரம் I, தரம II விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 10

திறமை, சேவை, மூப்பு அடிப்படையில் இலங்கை அதிபர்கள் சேவையின் I ஆம், II ஆம் தர பதவி உயர்வுக்கான விண்ணப்பப்படிவங்கள் யாழ். கல்வித் திணைக்கள முகாமைத்துவ நிலையத்தில் விநியோகிக்கப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை கோட்டப் பிரதம கல்வி அதிகாரி ஊடாக இன்று சனிக்கிழமைக்கு முன்னர் யாழ். கல்வித் திணைக்களத்தில் ஒப்படைக்கும்படி கல்விப் பணிப்பாளரினால் கேட்கப்படுகின்றனர். (த)

### இளைஞனின் சடலம்

குருநகர், ஆக. 10

மண்டைதீவு பிரதான வீதியில், வழிப்பிள்ளையார் கோவிலடியில் நேற்றுக் காலை இளைஞர் ஒருவர் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

புதிய 'லுமாலா' சைக்கிள் ஒன்று பூட்டிய நிலையில் சடலத்திற்குச் சமீபமாக நிற்கக் காணப்பட்டது.

சாம்பல் நிற நீளக் காற்சட்டை, சேட் அணிந்திருந்த அந்த இளைஞர் 25 வயது மதிக்கத் தக்கவராகக் காணப்பட்டார். [அ-51-125]

### படையினர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் உட்பட பல பெறுமதிமிக்க பொருள்கள் சூறையாடப்பட்டன.

ஹெலிக்கொப்டர்கள் வானில் வட்டமிட வெற்றிலைக்கேணி பக்கத்திலிருந்து நேற்று முன்தினம் டிராக்டரில் ஆழியவளை, உடுத்துறைப் பகுதிகளுக்கு வந்து திரும்பிச் சென்றதாக கருதப்படும் படையினரே இந்த வெறியாட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உடுத்துறையிலிருந்து இடம்பெயர்ந்து செம்பியன்பற்றில் குடும்பத்துடன் தங்கியிருந்த செல்லப்பர் சின்னத்துரை (வயது 55) என்ற வயோதிபர் உடுத்துறையில் உள்ள தனது வீட்டைப் பார்க்கச் சென்றபோது இராணுவத்தினரால் சுடப்பட்டு, மூளை சிதறிய நிலையில் காணப்பட்டார்.

அவரது சடலம் பின்னர் அந்தப் பகுதியிலேயே, பொது மக்கள் சிலரால் அடக்கம் செய்யப்பட்டது.

ஆழியவளையில் வீடு பார்க்கச் சென்றவர்களில் ஒருவரான சிவபாதம் ஜெயந்திரன் (வயது 22) இராணுவத்தினரின் சூட்டுக்கு இலக்காகி காயமுற்ற நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியிலும் —

கணபதிப்பிள்ளை கணேசகுமார் [வயது 22] என்பவர் யாழ் ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

படையினரிடம் சிக்கிக்கொண்ட ஆழியவளையைச் சேர்ந்த வயிரவப்பிள்ளை வல்லிபுரம் என்பவர் மிகவும் மோசமான தாக்குதல்களுக்கு இலக்கானார். அவர் பின்னர் ஒருவாறு தப்பி அன்றிரவே வீடுவந்து சேர்ந்தார்.

படையினர் அப்பகுதிகளுக்கு வந்திருந்தபோது, வீடு பார்க்கச் சென்றிருந்த பலர் படையினரின் கண்ணில் படாமல் மறைவிடங்களில் ஒளித்திருந்துவிட்டு நேற்று மாலை தமது உறவினர்களின் வீடுகளுக்கு பாதுகாப்பாக வந்து சேர்ந்தனர்.

படையினர் ஆழியவளை, உடுத்துறை ஆகிய இடங்களில், வீடுகளின் கூரைகளில் இருந்த அஸ்பெஸ்ரஸ் சீற்றுகளைக் கழற்றியும் வீடுகளை உடைத்து அங்கிருந்த கதிரை, மேசை, கட்டில் போன்ற பெறுமதியான தளபாடங்கள் உட்பட பல பெறுமதியான பொருள்களையும் எடுத்துச் சென்றுள்ளனர். [உ-144]

### நன்றித் திருப்பலி

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயப் பங்கின் முதற்குருவான அருட்திரு அருளானந்தம் நொனாலியாவிஸின் நன்றித் திருப்பலியும், வரவேற்பு விழாவும் இன்று பி. ப. 4 மணிக்கு மேற்படி ஆலயத்தில் நடைபெறும். [அ-30]

### உ. அ. அதிபர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஆக. 10

உதவி அரசாங்க அதிபர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று எதிர் வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். செயலக கேட்போர் அரங்கில் நடைபெறும்.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்து உதவி அரசாங்க அதிபர்களும் தவறாது கலந்துகொள்ள வேண்டும் என்று யாழ். மேலதிக அரசாங்க அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ)

### பாதசாரிகள் மீது ஹெலி சூடு

தாளையடி, ஆக. 10

நாகர்கோவில், வல்லிபுரக் கோவில் பகுதியில் வீதியால் செல்லும் பாதசாரிகள் மீதும், சைக்கிள் பயணிகள் மீதும் ஹெலி அடிக்கடி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து வருகின்றது. [ஒ-144]

### முகாம்களில்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

இவர்களைவிட 33,300 இடம்பெயர்ந்த குடும்பங்கள் உறவினர் வீடுகள் உட்பட முகாம்களுக்கு வெளியே தங்கியுள்ளன. இவர்களுக்கும் இது வரை உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது.

மேலும் இராணுவ நடவடிக்கைகளால் வருமானம் இழந்த 1,40,000 குடும்பங்களும் குடா நாட்டில் உலர் உணவு நிவாரணம் பெற்று வந்தன.

இந்த இரண்டு சாராருக்கும் இனி நிவாரணம் வழங்கப்படமாட்டாது.

எனினும் ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு, இப்போது நடைமுறையில் இருக்கும்—

முகாம்களுக்கு வெளியே இருக்கும் இடம்பெயர்ந்தோருக்கென ஒதுக்கப்பட்ட இரண்டு வார உலர் உணவும்—

வருமானம் இழந்தோருக்கென ஒதுக்கப்பட்ட ஒரு வார உலர் உணவும்—வழங்கப்படும் என்று யாழ். செயலக வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன. (அ-3)

### பாஸ் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் மீளப் புதுப்பிக்கப்பட வேண்டும்.

★ ஜூன் 20ஆம் திகதியில் இருந்து ஜூலை 10 ஆம் திகதி வரை வந்தவர்கள் மீளவும் வடபகுதிக்கு வெளியே எதிர் வரும் 20 ஆம் திகதிக்கு முன் செல்வதாயின், உள்ளே வரும் போது வழங்கப்பட்ட அனுமதி அட்டையைக் காண்பித்து, அவசர அனுமதி வழங்கும் காரியாலயத்தில் பணத்தைச் செலுத்தி, உடனடியாகப் பாஸைப் புதுப்பித்துக் கொள்ள முடியும்.

★ ஜூன் 20ஆம் திகதிக்கு முன்னர் வந்தவர்கள், சாதாரணமாக எல்லோருக்கும் உள்ள நடைமுறையைப் பின்பற்றி விண்ணப்பிக்க வேண்டும்.

★ மண்மீட்பு நிதி செலுத்தியோர் அதனை உறுதிப்படுத்த பற்றுச்சீட்டின் பிரதியை அல்லது சிற்றூரவையின் சிபார்சுக் கடிதத்தை இணைக்க வேண்டும்.

★ மாவீரர், போராளிகள் குடும்பம் தவிர்ந்த ஏனையோர் மண்மீட்பு நிதி செலுத் [illegible] ணத்தை மண்மீட்பு நிதி தொடர்பகத்தில் மாத்திரமே உறுதிப்படுத்தப்பட்ட பின் விண்ணப்பிக்க வேண்டும். (ஒ)

### கொழும்பு குண்டு வெடிப்பு:

## சந்தேக நபர்களுக்கு தடுப்புக் காவல் நீடிப்பு

கொழும்பு, ஆக. 10

கொழும்பு கூட்டுப்படைத் தலைமை அலுவலகத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அனைவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பின்னர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் ஐ. சோ. மு. எம். பி. வாசுதேவ நாணயக்கார கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் அரசு தரப்பில் இத்தகவல் வெளியிடப்பட்டது.

கூட்டுப்படைத் தலைமை அலுவலகத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரமும் அவரது ஆதரவாளர்களும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார்களா என்று திரு. வாசுதேவ நாணயக்கார கேட்டிருந்தார், [இ-எ]

## மிகக் குறைந்த மருந்தே கப்பலில் வந்து சேர்ந்தது

### தடுப்பூசி மருந்து அறவே இல்லை

கொழும்பு, ஆக. 10

'குமண' கப்பலில் மிகக் குறைவான மருந்து வகைகளே இம்முறை அனுப்பப்பட்டுள்ளன. அத்துடன் போலியோ எனப்படும் இளம்பிள்ளைவாத தடுப்பு மருந்து இம்முறை அறவே அனுப்பப்படவில்லை. யாழ். போதனா வைத்தியசாலையில் ஒரு வாரத்துக்கு முன்பே இந்த மருந்து முடிவடைந்து விட்டது.

இளம்பிள்ளைவாத நோய்த் தடுப்பு மருந்துக்காக தமது குழந்தைகளைக் கொண்டு வரும் பெற்றோர்கள் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

கப்பல் தாமதமாகியே வடபகுதி செல்லும் என எதிர்பார்க்கப்பட்டதால் தடுப்பூசி வகைகள் எதுவுமே கப்பலில் அனுப்பப்படவில்லை என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

### பருத்தித்துறையில் இருந்து

## உணவுப் பொருள்களை எடுத்துவர விசேட அனுமதி

யாழ்ப்பாணம், ஆக. 10

பருத்தித்துறையில் கப்பலில் இருந்து இறக்கப்படும் உணவுப் பொருள்களை ஊரடங்கு வேளையிலும் கோண்டாவிலிலுள்ள உணவுக் களஞ்சியத்துக்கு எடுத்துவர விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஒரே அணியாக தினமும் 15லொறிகளில் பொருள்களை எடுத்துவர அனுமதிக்கப்பட்டுள்ளது.

நேற்று 15 லொறிகளில் அரிசி, மா, சீனி போன்ற பொருள்கள் எடுத்துவரப்பட்டு, கோண்டாவிலில் களஞ்சியப்படுத்தப் பட்டன.

## காங்கேயம் தொகுதியில் தி.மு.க. போட்டியிடாது

சென்னை, ஆகஸ்ட் 10

பெரியார் மாவட்டம் காங்கேயம் சட்டசபைக்கான இடைத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என திராவிட முன்னேற்றக் கழகம் நேற்று அறிவித்தது.

இம் மாதம் 24 ஆம் திகதி இத் தொகுதி உட்பட, முசிரி, எழும்பூர் மற்றும் துறைமுகம் ஆகிய தொகுதிகளுக்கான இடைத் தேர்தல் நடைபெறவுள்ளது தெரிந்ததே.

காங்கேயம் தொகுதியில் தி. மு. க. நிறுத்திய வேட்பாளர் திரு. பொன் இரத்தினசாமிக்கு அக் கட்சியின் உதய சூரியன் தேர்தல் சின்னத்தை வழங்க தேர்தல் அதிகாரி மறுத்துவிட்டார்.

இது குறித்து தி. மு. க. வும் அதன் தோழமைக் கட்சிகளும் இந்திய பிரதம தேர்தல் ஆணையாளர் வரை முறையிட்டும் பலனளிக்காதுபோகவே, காங்கேயம் தொகுதியில் போட்டியிடுவதில் இருந்து விலகிக் கொள்வதாக தி. மு. க. பொதுச் செயலாளர் க. அன்பழகன் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

ஏனைய மூன்று தொகுதிகளிலும் தி. மு. க. வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

கடந்த சட்ட சபைத் தேர்தலில் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா வெற்றியீட்டிய இரண்டு தொகுதிகளில் காங்கேயமும் ஒன்று. பர்கூர் தொகுதி உறுப்பினராக இருந்து கொண்டு செல்வி ஜெயலலிதா காங்கேயம் உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்தார். காங்கேயம் இடைத் தேர்தலில் அ. தி. மு. க. வேட்பாளராக கல்வி அமைச்சர் இராம. வீரப்பன் போட்டியிடுகிறார். [இ-எ]

## குவைத்தில் வேலையிழந்த இலங்கையருக்கு நஷ்டஈடு!

### ரூ. 2½ லட்சம் வரை கிடைக்கும்

கொழும்பு, ஆக. 10

வளைகுடா நெருக்கடியால் குவைத்தில் வேலையிழந்த இலங்கையருக்கு நஷ்ட ஈடு வழங்க ஐக்கிய நாடுகள் சபை தீர்மானித்துள்ளது.

நஷ்ட ஈடாக இரண்டரை லட்சம் ரூபாவிற்கு மேற்படாமல் — குறைந்த பட்சம் ஒரு லட்சம் ரூபா வரை — வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இடம்பெற்ற ஐ. நாவின் விசேட கூட்டம் ஒன்றில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறு வேலை இழந்தோருக்கு மீண்டும் குவைத்தில் வேலை வசதி செய்து கொடுக்கவும் முடிவாகியுள்ளது.

சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் ஏற்பாட்டில் நடந்த தொழில் அமைச்சர்கள் மாநாட்டில் ஸ்ரீலங்காவின் தொழில் அமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திரா சமர்ப்பித்த திட்டத்தின்படி இது சாத்தியப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்தகவல்களை தொழில் அமைச்சர் பிரேமச்சந்திரா நேற்று பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் வெளியிட்டார். [உ-த]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா மகாலட்சுமி - மந்துவில்

(ஓய்வு பெற்ற நெசவு ஆசிரியை)

மந்துவில் வடக்கு ஓய்வு பெற்ற நெசவு ஆசிரியை திருமதி செல்லையா மகாலட்சுமி அவர்கள் 6-8-1991 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார். இவர் காலஞ்சென்ற உதயகுமாரின் அன்புத் தாயார் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. செல்லையா

மந்துவில்,
கொடிகாமம். (சி/0341)

## பொன்னம்மா கந்தையா

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பரந்தன் முரசுமோட்டை 253/3இல் வசித்தவருமான திருமதி பொன்னம்மா கந்தையா அவர்கள் யாழ்ப்பாணம் 25, றக்கா வீதி இல்லத்தில் காலமானார். இவர் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், இலட்சுமணன் (J. P.), காலஞ்சென்ற சந்திரபாலன், வன்னியசிங்கம் (ஐக்கிய நாடுகள், அகதிகள் உயர் ஆணையாளர் அலுவலகம், ஜெனிவா), திருமதி கனகமணி பாலசுப்பிரமணியம் (ஜெனிவா) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி வள்ளியம்மை இலட்சுமணன் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ். சென் மேரிஸ் வித்தியாலயம்). திருமதி பாக்கியலட்சுமி சந்திரபாலன், திருமதி கலாமதி வன்னியசிங்கம் (ஜெனிவா), திரு. இ. பாலசுப்பிரமணியம் (ஜெனிவா) ஆகியோரின் பிரிய மாமியாரும், திருமதி இராஜேஸ்வரி கணபதிப்பிள்ளை, திருமதி நடராசா நவநீதம், திரு. கந்தையா விசுவலிங்கம் (ஓய்வு பெற்ற சுகாதாரப் பரிசோதகர்), ஆகியோரின் சிறிய தாயும், கலைச்செல்வன், சிவச்செல்வன் (இந்தியா), எழில்செல்வன், சந்திரபாமினி, சந்திரமோகன், சந்திரசாமினி, சந்திரகாசன், சந்திரநிஷாந்தினி, ஜெனனி, நிரோஷன், கார்த்திக், வித்தியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [10 - 08 - 91] சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு 25, றக்கா வீதி இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கந்தையா இலட்சுமணன்
(மகன் ஜே. பி)

25, றக்கா வீதி,
யாழ்ப்பாணம். (17770)

## திரு. சாமுவேல் டயனிசியஸ்

[நிர்வாக உத்தியோகத்தர் திட்டமிடல் இளைஞர் விவகார அமைச்சு திருகோணமலை]

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. S. டயனிசியஸ் கொழும்பில் 6-8-91 இல் காலமானார். இவர் பொன்மலரின் அன்புக் கணவரும், டவ்னி அன்ரனற், நில்மினி இவாஞ்சலின், பிரியாந்தி மரீனா [யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்], தனுஷா செலீன் [யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்] ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு S.பீற்றர் [உடுவில்], திரு.S.தேவநாயகம் [அவுஸ்திரேலியா] ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [10-8-91] பி.ப. 4 மணிக்கு கொழும்பில் நல்லடக்கம் செய்யப்படும். இன்று பி.ப. 4 மணிக்கு றக்கா வீதி, புனித தெரேசாள் ஆலயத்தில் அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிற்காக திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

122, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். [17774]

## சிங்காரப்பத்தர் சாம்பசிவம்

கன்னாதிட்டியைச் சேர்ந்த சிங்காரப்பத்தர் சாம்பசிவம் 9-8-91 காலமாகிவிட்டார். இவர் ஜெயலெட்சுமியின் அன்புக்கணவரும், கிரிதரன், சிங்கராசா, செல்லத்துரை ஆகியோரின் தகப்பனாரும் கௌரி, சாரதாதேவி ஆகியோரின் மாமனாரும், குமரன், அரவிந், ஜயரூபன், சிந்துஜன் ஆகியோரின் பேரனும் ச. நாராயணசாமி, வை. பாலகிருஷ்ணன், வை. நடராசா, காலஞ்சென்றவர்களான (திருகோணமலை) சி. முருகையா, சி. கிருஷ்ணசாமி ஆகியோரின் சகோதரரும் (காலஞ்சென்ற) து. கிருஷ்ணசாமி, து. பஞ்சரெத்தினகோபால், து. வேணுகோபால், து. ராஜகோபால், து. கோபாலசாமி ஆகியோரது மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 10-8-91 சனிக்கிழமை பி. ப. 3 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் எல்லோருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
எஸ். கிரிதரன்

120, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (17775)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 10 - 08 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஆக. 10

யாழ். மாவட்டத்தில் சிறுவர் பயிற்சி நெறியைப் பின்பற்றும் 125 யுவதிகளுக்கான கருத்தரங்கு இன்று சனிக்கிழமை வண்ணார்பண்ணை பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் நடைபெறுகிறது. (இ)

## கோப்பாயில்

கோப்பாய் ஆகஸ்ட் 10

கோப்பாய், உரும்பராய் பொதுச் சுகாதாரப் பிரிவுக்கு உட்பட்ட தேநீர்க் கடை உரிமையாளர்கள், பேக்கரி உரிமையாளர்கள் ஆகியோருக்கான கருத்தரங்கு இன்று சனிக்கிழமை கோப்பாய் பொதுச் சுகாதார பணிமனையில் நடைபெறவுள்ளது. [இ-72]

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்,
இலங்கை.

### சித்த மருத்துவப் பிரிவிற்கு 1990/91 ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்களை அனுமதித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சித்த மருத்துவப் பிரிவிற்கு பி. எஸ். எம். எஸ். பட்டமாணிப் படிப்பிற்கான மாணவர்களைச் சேர்ப்பதற்கு பின்வரும் தகைமைகள் உள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

(அ) 1987, 1988, 1989 ஆகஸ்ட் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் படி, இரசாயனவியல், பௌதீகவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய நான்கு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(ஆ) 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் 21 ஆம் திகதியன்று 17 வயதிற்கு குறையாதவராக இருக்க வேண்டும்.

21 - 09 - 1991 இல் மேற்குறிப்பிட்ட கல்வித் தகைமைகள் யாவும் உடையவராக இருத்தல் வேண்டும். மேற்கூறப்பட்டவைக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அனுமதி பற்றிய விவரங்களும், விண்ணப்பப் பத்திரமும் பிரதிப் பதிவாளர் (தேர்வுகளும் அனுமதிகளும்) தேர்வுக் கிளை, அவர்களிடமிருந்து ரூபா 10 செலுத்தியோ, தபால் மூலம் எனின் 23x10 செ. மீ. அளவுள்ள தபால் மேலுறை ஒன்றை முத்திரையிட்டு, விலாசமிட்டு, ரூபா 10 க்கான காசுக் கட்டளையை நிதியாளர், யாழ். பல்கலைக் கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்டு அத்துடன் அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 02 - 09 - 1991.

பதிவாளர்.
[சி-0337]

## ராணுவ ஆஸ்பத்திரிகளுக்கு பிரேமா நேற்று விஜயம்

கொழும்பு, ஆக. 10

பனாகொடை மற்றும் கொழும்பு ராணுவ தலைமையக ஆஸ்பத்திரிகளுக்கு நேற்று விஜயம் செய்த ஜனாதிபதி பிரேமதாச அங்கு சிகிச்சை பெற்றுவரும் படையினரின் நலன்களைக் கேட்டறிந்தார்.

ஜனாதிபதியுடன் பிரதம மந்திரி டி. பி. விஜேதுங்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க, இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்க ஆகியோரும் சென்றிருந்தார்கள்.

பனாகொடை இராணுவ ஆஸ்பத்திரியில் மட்டும் 250 படையினர் சிகிச்சை பெற்று வருகின்றனர். [ஓ-த]

## நோயாளருடனான கப்பல் செவ்வாயன்று புறப்பாடு

யாழ்ப்பாணம், ஆக. 10

நோயாளிகளுடனான கப்பல் எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை புறப்பட்டுச் செல்கிறது.

கப்பலில் கொழும்பு செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களும் அவர்களுடன் கூடச் செல்லும் உறவினர்களும் இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு, தண்ணீர் என்பவற்றுடன் அன்றைய தினம் காலை 6. 00 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் சமுகம் அளிக்குமாறு கோரப்பட்டுள்ளனர். (இ)

## சம்மாந்துறைப் பகுதியில் 7 விவசாயிகள் கொலை

கொழும்பு, ஆக. 10

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சம்மாந்துறையில் இனந்தெரியாத ஆயுத பாணிகள் நடத்திய தாக்குதலில் ஏழு விவசாயிகள் கொல்லப்பட்டனர் என்று நேற்று செய்தி ஏஜென்சிகள் தகவல் வெளியிட்டன.

இந்தச் சம்பவத்தில் கொலையுண்ட எழுவரும் முஸ்லிம்கள் என்றும்—

சம்பவம் நடந்த இடத்துக்குப் படையினர் விரைந்து சென்று நடத்திய பதில் தாக்குதலில் ஆயுதபாணிகள் இருவர் இறந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-த)

## ஆறு இலங்கைத் தமிழர் திருச்சியில் கைதாகினர்

சென்னை, ஆக. 10

திருச்சி மாவட்டத்தில் சில பகுதிகளில் கடந்த வியாழக்கிழமை ஒரு பெண் உட்பட ஆறு இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் அனைவரும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு உடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படுவதாகவும் பொலீஸார் அறிவித்தனர். (இ-எ)

## ஊரடங்கு நீங்கிய பின்பே விண்ணப்பம் ஏற்கப்படும்

'பிறப்புச்சான்றிதழ்கள் வழங்குவதற்கான புத்தகங்கள் செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன. ஆனால் ஊரடங்கு நீக்கப்பட்ட பின்னரே விண்ணப்பங்கள் ஏற்கப்படும்'.

யாழ். செயலக பதிவாளர் அலுவலக அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கப்பல் மூலம் 75 புத்தகங்கள் வந்துசேர்ந்துள்ளன என்றும், ஏற்கனவே விண்ணப்பித்தவர்களுக்கு தபால் மூலம் பிரதிகள் அனுப்பப்படுவதாகவும், புதிய விண்ணப்பங்கள் ஊரடங்கு நீக்கப்பட்ட பின்னரே ஏற்கப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். [இ-3]

### இனப் பிரச்சினைக்குத் தீர்வு:

## தெரிவுக்குழு அமைக்கும் பிரேரணை நிறைவேறியது

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்கக் கோரும் தனிநபர் பிரேரணை ஒன்று, நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்தப் பிரேரணையை சுதந்திரக்கட்சி எம். பி. மங்கள முனசிங்கா சமர்ப்பித்திருந்தார்.

நாட்டில் சமாதானத்தையும், ஸ்திர நிலையையும் ஏற்படுத்த இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமனம் செய்யப்படுவது அவசியமாகின்றது என்றும் இந்தப் பிரேரணையில் கூறப்பட்டிருந்தது.

இந்தப் பிரேரணைக்கு விவாதம் இன்றி ஆதரவளிப்பது என்று ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி முன்னர் அறிவித்திருந்தது தெரிந்ததே.

இப்பிரேரணையை ஆதரிப்பது என்று சுதந்திரக் கட்சியும் பின்னர் தீர்மானித்திருந்தது. (இ-எ-த)

## சென்னையில் 5 மாணவிகள் திடீரெனத் தலைமறைவு

### பொலீஸார் தீவிர வலைவீச்சு

சென்னை, ஆக. 10

சென்னை நகரில் 5 பாடசாலை மாணவிகள் காணாமற் போய்விட்டனர் என அறிவிக்கப்படுகிறது.

அவர்களில் நான்கு பேர் ஒன்பதாம் வகுப்பு மாணவிகள் என்றும், ஒருவர் ஆறாம் வகுப்பு மாணவி என்றும் சொல்லப்படுகிறது.

காணாமற் போனவர்களைக் கண்டு பிடிக்க பொலீஸார் தீவிர தேடுதல் நடத்தி வருகின்றனர் என அறிவிக்கப்படுகிறது. [இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org